# *NFTE-BSNL*

## தமிழ் மாநில சங்கம்

## பதவி உயர்வு திட்டம்

## விளக்கங்களின் மீதான விளக்கம்

பதவி உயர்வு திட்டம் குறித்த நீண்ட விளக்கத்தினை ஆகஸ்ட் 20,2010 அன்று BSNL நிர்வாகம் தந்துள்ளது. பதவி உயர்வு திட்டத்திற்காக போடப்பட்ட கமிட்டி தனது பரிந்துரைகளை 1¼ பக்கத்திற்கு மிகாமல் அக் 30,2008 அன்று தந்திருந்தது. பதவி உயர்வு வந்தேவிட்டது-எங்கும் பணமழை என்று கொண்டாடி வாக்குப் பெற்றது BSNLEU.

பரிந்துரைகளை படித்து படித்து களைத்துப்போன நிர்வாகம் ஆர அமர யோசித்து மார்ச் 23, 2010 அன்று 7 பக்கத்திற்கு மிகாமல் உத்தரவு ஒன்றை வெளியிட்டது. உத்தரவு தெளிவான குழப்பங்களை உருவாக்கியது. ஏராள விளக்கங்கள் கோரப்பட்டன. தற்போது 10 பக்கத்திற்கு விளக்கங்கள் வந்துள்ளன. அவை குறித்த குறிப்பை தந்திருக்கிறோம். **பெறவேண்டிய பதவி உயர்வுகளை விட பெற்ற பதவி உயர்வுகளை பட்டியலிடுவதிலேயே NEPP விளக்கம் கவனம் செலுத்தியுள்ளது** புதிய கேள்விகள் எழாமல் இல்லை.அனத்தும் தெளிவாக்கப்பட்டுவிட்டது என்றுசொல்ல முடியாத நிலை தான் தொடர்கிறது. தொடர் விளக்கம் தேவைப்படலாம்.

- **இரண்டு விருப்ப படிவங்கள்**- (1) NEPPல் நுழைகிறோமா அல்லது OTBP/BCR/10%ல் தொடரப் போகிறோமா என்பதற்குரியது. (2) NEPPல் நுழைந்தவர் தரவேண்டிய விருப்பபடிவம்- 01-10-04 முதல் **'முதல் பதவிஉயர்வை'** முன் கூட்டி பெறுவது- தான் பெற்ற பதவி உயர்வை முதல் பதவி உயர்வாக கருத சம்மதிப்பது குறித்த படிவமது.

- NEPPல் நுழைந்தவர் 01-10-2000 முதல் 23-03-10 காலத்தில் OTBP/BCR/RC வாங்கியிருந்தால் அதன் **பணப்பலன்** புதிய திட்டப்படி **சரிகட்டப்படும்**. நிர்வாகத்திற்கு ஊழியர் தரவேண்டியிருந்தால் அப்பணம் **தவணைகளில் பெறப்படும்**. தவணை எண்ணிக்கையை CO/Circle/SSA முடிவெடுக்கலாம். மார்ச் 2011க்குள் முடிவடையும் தவணைகளாக இருக்க வேண்டும். இவ்விளக்கம் மீண்டும் குழப்பத்தையே உருவாக்கப்போகிறது.

- 01.10.04ல் முதல் பதவி உயர்வு பெற விருப்பம் தெரிவிப்பவர்களுக்கு அவர்கள் 01.04.08 வரை பெற்ற **ஊதியத்திற்கு Pay Protection கிடையாது**. இதனால் மீண்டும் குழப்பமே நிலவப்போகிறது.

- 1-10-2000 முதல் 22-3-10 காலத்தில் நடந்த DPC குறிப்புகள் முதல் பதவி உயர்விற்கு பொருந்தும்.

- 1-10-2000 முதல் 30-9-2004 வரை வேறு போஸ்ட்களுக்கு பெற்ற பதவி உயர்வும் முதல் பதவி உயர்வாக கருதப்படும். அதேபோல் 1-10-2004 முதல் 22-3-2010 வரை போஸ்ட் அடிப்படையில் பெற்ற பதவி உயர்வுகளும் முதல் பதவி உயர்வாக கருதப்படும்.

- முதல் பதவி உயர்வு பெற்ற தினத்திலிருந்து (1-10-2000- 1-10-04 காலத்தில்) 7 ஆண்டுகளில் இரண்டாவது பதவி உயர்வு பெறலாம்.
- ஆண்டுயர்வு தேதியிலிருந்து பதவி உயர்வு பெற்றிருந்தாலும் அவர் பதவிஉயர்வு தகுதி பெற்ற நாளிலிருந்து அடுத்த பதவி உயர்வு காலம் கணக்கில் கொள்ளப்படும்.

- NEPPல் நுழைவதால் OTBP/BCR/10%ன் சலுகைகள் திரும்பப் பெறப்படும் என்பதில் ஏதேனும் பிரச்சனைகள் எழுந்தால் கார்ப்பரேட் அலுவலகத்திற்கு refer செய்திடவேண்டும்.

- 1-10-2000 முதல் 30-9-2004 வரை பெற்ற **post based பதவிஉயர்விற்கான** நிதிப்பலன் (31-3-08 வரையிலானது) **பிடிக்கப்படமாட்டது.**

- SrTOA /TM/ TTA பதவி உயர்வுகளும் post based பதவி உயர்வுகளாகவே கருதப்படும்.

- NEPP பதவி உயர்வை **ஆண்டுயர்வு தேதியிலிருந்தும்** பெறலாம்.

- 1-10-2000 முதல் 22-3-2010 வரை பெறப்பட்ட BCR, 10% முதல் மற்றும் இரண்டாவது பதவி உயர்வாக கருதப்படும்

- TSM/CL ஆக 30-9-2000ல் இருந்து BSNLல் நுழைந்தவர் குறித்து விளக்கம் பின்னர் தரப்படும்

- **LDC (TA) லிருந்து TOA** பெற்றவர்க்கு அதுவே முதல் பதவி உயர்வாகும்.

- 1-10-2000 முதல் 1-10-2004 வரை **Short fall** மூலம் பெற்ற பதவி உயர்வும் **முதல் பதவி உயர்வாக** கருதப்படும். 1-10-2004 முதல் 22-3-2010 வரை பெறப்பட்ட பதவி உயர்வு மற்றும் கேடர் மாற்றங்கள் இரண்டாவது மற்றும் மூன்றாவது பதவி உயர்வாக கருதப்படும்

- **NE 7** ஊதியத்தில் உள்ளவர்க்கு அடுத்த பதவி உயர்விற்கான ஊதியநிலை NE 9 (7100) அல்ல. உடன் அடுத்த **NE 8** (6550) தான்.

- **RM களுக்கும்** உடன் அடுத்த ஊதியநிலைகளில்தான் பதவி உயர்வுகள்

- TM பதவிகள் இன்மையால் பதவி உயர்வு பெறமுடியாமல் போய் 1-10-2000க்கு முன் 4250 மற்றும் 4550 ஊதியநிலைகளில் வைக்கப்பட்ட RM/GrDக்கள் உடன் அடுத்த ஊதிய நிலையில் 4 ஆண்டுகளில் முதல் பதவி உயர்வு பெறலாம்

- **Dies non- Exol without MC** நாட்கள் தகுதிகாலமாக கருதப்படாது

- NE 1- NE 10 வரையிலான ஊதியநிலைகளில் உள்ள அனைத்து கேடர் ஊழியருக்கும் (1-4-08 அன்று பணியில் இருக்கும்) NEPP பொருந்தும்

- TTA ஊதியம் **4500 லிருந்து 5000க்கு** 1-10-2000 முதல் மேம்படுத்தப்பட்டது. அதுவே அவர்களுக்கு **முதல் பதவி உயர்வாக** கருதப்படும். இரண்டாவது பதவி உயர்வை அவர்கள் 1-10-07 ல் பெறலாம். நேரடி TTAகள் 8 ஆண்டுகளில் இதனை பெறுவர்

- **NEPPக்கு விருப்பம் தராதவர்களின் BCR எண்ணிக்கையை** வைத்தே இனி 10% கணக்கிடப்படும்

நிர்வாகம் தந்துள்ள விளக்கங்கள், மறைவாக வைக்கப்பட்டிருந்த சில பாதகமான அம்சங்களைக் கூட வெளிக்கொணர்ந்து விட்டது.

1-10-2000 முதல் 22-3-2010 வரை நாம் ஏற்கனவே இருந்த திட்டங்களின்படி பெற்ற அனைத்து வகையிலான பதவி உயர்வுகளையும் 4 பதவி உயர்வுகள் என்ற கோணிப்பையில் போட்டு தைத்துவிட்டது நிர்வாகம்.

சாராம்சத்தில் ஒரு பதவி உயர்வு மட்டுமே என்ற நிலை உருவாகியுள்ளது. அந்த பதவி உயர்வை பெறுவதற்கே கூட 01.10.04 க்கு முன்பு OTBP/BCR/ACP பெற்ற ஊழியர், அவர்கள் அனுபவித்து வரும் actual benefits ஐ 01.04.08 வரை இழக்கும் பரிதாப நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

SC/ST ஊழியருக்கு இட ஒதுக்கீடு இல்லை என்ற நிலையை தாண்டி கூடுதல் அநீதியும் இழைக்கப்பட்டுள்ளது. Short fall மூலம் பெற்ற பதவி உயர்வைக்கூட அது விட்டு வைக்காமல் உள்ளிழுத்துக் கொண்டுவிட்டது. 1-10-2004 முதல் 22-3-2010 வரை Short fall பிறகு Sr TOA அதன்பின் OTBP/BCR என்றால் அவர் 3 பதவி உயர்வுகளை பெற்றுவிட்டதாக கருதப்படும். மீதமாக அவர் பெற இருப்பது 8 ஆண்டுகள் சேவை இருந்தால் ஒரே ஒரு பதவி உயர்வு, அதுவும் NE11 ஊதிய நிலையில் தான். ஒருவேளை 9200 ஊதிய நிலை வந்தால் கூட அவர் பெற வாய்ப்பு இருக்காது. இதனால் SC/ST அல்லாத ஊழியர் ஒருவருக்கு கிடைக்கப்போகும் வாய்ப்பு கூட

SC/ST ஊழியருக்கு கிட்டாமல் போய்விடும். இட ஒதுக்கீடு உள்ள பதவி உயர்வு திட்டத்தையும் இட ஒதுக்கீடு இல்லாத NEPP திட்டத்தையும் நிர்வாகம் ஒன்றாக கட்டிப்போட்டு விட்டது.

TTA ஊதிய மேம்பாடு 5000 என்பதைக்கூட தன் கணக்கில் வைத்துக்கொண்டு விட்டது NEPP. OTBP/BCR/10% ACP தனியாகவும் கேடர் சீரமைப்பில் SrTOA /TM/ TTA தனியாகவும் பதவி உயர்வினை கணக்குப் பார்க்காமல் பெற்ற ஊழியருக்கு அவையெல்லாம் 'என் கணக்கு' என்று NEPP முடிவு கட்டிவிட்டது. பதவி உயர்வு உடன்பாட்டில் இடம்பெறாத பாதகமான அம்சங்களை எல்லாம் உத்தரவில் சேர்த்ததோடல்லாமல் பின்னர் தந்த விளக்கத்தில் எதிர்மறை அம்சங்களையும் வெளிச்சமிட்டுவிட்டது நிர்வாகம்.
NEPP விருப்பம் தாராதவர்களுக்கு 10% பதவி உயர்வு கிடைப்பது குதிரைக் கொம்பு. அவர்களுக்கு மத்திய அரசின் புதிய MACP ன் மூன்றாம் பதவி உயர்வு கூட நீட்டிக்கப்படவில்லை.

பதவி உயர்வு குறித்து நாம் பலமுறை முன் வைத்த விமர்சனங்களுக்கு எந்த பதிலும் கிட்டவில்லை. அங்கீகரிக்கப்பட்ட சங்கமோ பதவி உயர்வின் பாதகங்களை களைந்திட ஒன்றுபட்ட இயக்கங்களை உருவாக்கிட விரும்பவில்லை. தான் போட்ட உடன்பாடு என்று மார் தட்டிக் கொள்ளும் உணர்வில் தான் அதன் தொழிற்பாடு உள்ளது. ஊழியர் பிரச்சினையில் ஒன்றுபட்டுப் போராடினால் நாம் விரும்பும் மாற்றங்கள் சாத்தியமே.